## யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி

சாவகச்சேரி

# ஆசிரியர் தினம்

## 06-10-1997

மாணவ சமூகத்தின் எதிர்கால நலனுக்காகத் தம்மையே அர்ப்பணித்துவிட்ட ஓர் ஆசிரிய சேவையில் எம்மையும் நாம் இணைத்துவிட்டோம் என்பது தான் எமக்குரிய குலப்பெருமை குடும்பப்பெருமையும் கூட......

பிரதமவிருந்தினர்:

**உயர்திரு. க. சின்னத்தம்பி அவர்கள்**

(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வித்துறை - யாழ் பல்கலைக்கழகம்)

வெளியீடு:

**பாடசாலை அபிவிருத்திச் சபை**

**பழைய மாணவர் சங்கம்**

யா/சா. இந்துக்கல்லூரி.

சாவகச்சேரி.

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்திற் சிந்திய, இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையிற் சேர்க்கும் பணி எமதே — முத்து

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாய் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம். — முத்து

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம். — முத்து

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம். — முத்து

**சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீவாமதேவன்**
யா/ சாவகச்சேரி மகளிர் ம. வி.

யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச் சபையும், பழைய மாணவர் சங்கமும்

இணைந்து நடத்தும்

# ஆசிரியர் தினம்

# 06-10-1997

**காலம்:** 06-10-1997 திங்கள் காலை 9-00 மணி

**இடம்:** கல்லூரி அருணாசலம் மண்டபம்

**தலைவர்:** திரு. க. சந்திரசேகரா (அதிபர்)

பிரதம விருந்தினர்: **உயர்திரு. க. சின்னத்தம்பி அவர்கள்**

(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வித்துறை - யாழ் பல்கலைக்கழகம்)

## நிகழ்ச்சி நிரல்

1. **ஆசிரிய கீதம்:**
2. **வரவேற்புரை:** திரு. த. நாகேஸ்வரன் (செயலாளர், பாடசாலை அபிவிருத்திச்சபை)
3. **தலைமையுரை:** அதிபர் அவர்கள்
4. பிரதம விருந்தினர் உரை:
5. சிறப்புரை: பேராசிரியர் திரு. க. கந்தசாமி
6. **வாழ்த்துரை:** செல்வன் ந. அருள்செல்வன் (முதன்மை மாணவர் தலைவர்)
   செல்வி த. நர்மதா (மாணவி 8, E)
7. பதிலுரை: திரு. த. பாலசண்முகநாதன் (செயலாளர், ஆசிரிய சகோதரத்துவம்)
8. **நன்றியுரை:** டாக்டர் சு. சி. அருளானந்தம் (செயலாளர், பழைய மாணவர் சங்கம்)

# கலை நிகழ்ச்சிகள்

1 பூப்பொழிந்து வாழ்த்துகிறோம்
புனிதபணி தொடரட்டும்"
— கவியரங்கு (பாடசாலை மாணவர்கள்)

2 "உள்ளத் தென்றும் உங்கள் சேவை
உயர்வாய் நின்று பெயர் கூறும்"
— இசையரங்கு (கல்லூரி, சங்கீதத் துறையினர்)

3 "நடமாடுந் தெய்வங்காள்__
நடமாடித் துதிக்கின்றோம்"
— ஆடலரங்கு (கல்லூரி நடனத்துறை)

4 பட்டி மண்டபம்: தலைப்பு
"இன்றைய கல்விமுறை......
திருத்தப்பட வேண்டுமா__?
மாற்றப்பட வேண்டுமா......?

தலைமை: திரு. க. சந்திரசேகரா அவர்கள் (அதிபர்)

| திருத்தப்பட வேண்டும் | மாற்றப்பட வேண்டும் |
|---|---|
| திரு. க. சுந்தரலிங்கம் | திரு. த. நாகேஸ்வரன் |
| திருமதி ஞா. நாகராசா | திருமதி செ. செல்வராசா |
| திரு. ந. இரவிந்திரகுமார் | திரு. கு. இராகவராஜன் |

5 நாடகம்:
திரு. க. சுந்தரலிங்கத்தின் நெறியாட்கையில்
அராலியூர் ந. சுந்தம்பிள்ளையின்
"முதலாம் பிள்ளை"

# ஆசிரியமும் பொறுப்பியமும்
# (Teacher And Accountability)

பொறுப்புக் கூறல் அல்லது வகை கூறல் அல்லது பொறுப்பியம் என்பதை ஆசிரியத்துவத்துடன் இணைத்து ஆராயும் நிலமைகள் அண்மைக்காலமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. கல்வி முகாமைத்துவம் என்பது அதிகாரம், வலு, பங்கேற்றல், பொறுப்பியம் என்ற நான்கு துறைகளிலும், சமநிலை கொண்ட செயற்பாடாக அமைகின்றது. இந்த நான்கு துறைகளிலும் சமநிலை தளம்பும் பொழுது முழுக்கல்வித் தொகுதியும் பாதிக்கப்படுவதுடன் பிரச்சினைகளும் எழும்.

கல்விக்குரிய முதலீடும், வளமும் சமூகத்தால் நேரடியாகவும் மறைமுகமாகவும் மிகுந்த எதிர்பார்ப்புடன் வழங்கப்படுவதால் ஆசிரியர்களும், நிர்வாகிகளும், பணியாளர்களும் தமது மேலதிகாரிகளுக்கு மட்டுமல்ல முழுச்சமூகத்துக்குமே பொறுப்பியம் தருதல் வேண்டியுள்ளது.

ஆசிரியர்களுக்குப் புலமை சார்ந்த அதிகாரம் தரப்பட்டுள்ளமையால், அவர் தமது ஆற்றுகையின் தரத்துக்கு (QUALITY OF PERFORMANCE) பொறுப்புக் கூறவேண்டியுள்ளது. இதனை ஆசிரியர் ஒரு சுமையாகக் கருதாதவிடத்து வினைத்திறன் மேலோங்கும். ஓர் ஆசிரியரின் ஆற்றுகைத் தரத்துக்குரிய வெகுமதி நிர்வாகிகளிடமிருந்து கிடைக்கும் பொழுது வினைத்திறன் மேலும் உயர்ந்து செல்லும்.

இக் காரணத்தால் அதிகாரம், வலு, பங்கேற்றல், பொறுப்பியம் ஆகிய நான்கும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவராலும், ஒவ்வொரு கட்டத்திலும், பாதுகாக்கப்படவேண்டியுள்ளன. கல்வி முகாமைத்துவ செயலமைப்பு நிரல் ஒன்றினைத் தயாரிக்கும் பொழுது பின்வருவனவற்றிலே கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1 — முழுக்கல்வித் தொகுதியிலும் ஆசிரியரின் நிலை யாது?
2 — ஆசிரியரின் ஆற்றுகை என்ன?
3 — யாருக்கு ஆசிரியர் பொறுப்பியம் தருதல் வேண்டும்?
4 — ஆசிரியருக்கு யார் பொறுப்பியம் தருதல் வேண்டும்?
5 — கல்வித் தொகுதியின் மேம்பாட்டுக்கு உதவுபவர் யார்?
6 — அவர்கள் என்ன செய்கின்றார்கள்?
7 — அவர்கள் யாருக்குப் பொறுப்பியம் தருதல் வேண்டும்?
8 — வேறு

மேற்கூறிய ஒழுங்கமைப்பு நிரல் கல்வித் தொகுதியில் உள்ள ஒவ்வொருவரும் தத்தமது நிலையைத் தெளிவுபடுத்துவதற்குத் துணை செய்வதுடன் கூட்டுமொத்தமான செயற்பாடுகளில் முன்னேற்றத்தினை வருவிக்கும். இவற்றிலிருந்து பொறுப்பியத்தின் இன்னொரு பரிமாணத்தினை நோக்குதல் வேண்டும். அதாவது கல்வி விளைவுகளுக்கான பொறுப்பியத்தை ஒருவர் மற்றவர் மீது சுமத்திவிட முடியாமலிருத்தலாகும்.

ஆசிரியத்துவப் பணியிலே சிறப்பாக அறிந்து கொள்ளப்படவேண்டிய ஓர் எண்ணக்கருவாக பொறுப்பியம் விளங்குகின்றது. தமது ஆற்றுகைகளுக்கும் தீர்மானங்களுக்கும் ஆசிரியர் பொறுப்பியம் தருதல் போன்று, தமது கண்காணிப்பில் விடப்பட்டுள்ள மாணவர்களின் ஆற்றுகைகளுக்கும் பொறுப்பியம் தரும் மரபு எமது பாரம்பரியமான கல்வி முறைமையிலே காணப்பட்ட ஒரு சிறப்புப்பண்பாகும்.

பொறுப்பியம் என்பது பங்கிடப்படாத முழுமை கொண்டது (ABSOLUTENESS) என்பதை கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆசிரியத்துவம் என்பது தனித்துவமான, பிரதியீடற்ற முழுப்பொருளாக இருத்தல்போன்று, பொறுப்பியமும் பிரதியீடற்ற முழுப்பொருளாகவுள்ளது. கல்வியின் வெற்றி ஆசிரியர்களின் ஆற்றுகையிலே தங்கியுள்ளது.

ஆசிரியரும் பொறுப்பியமும் தொடர்பான அண்மைக்காலத்து வளர்ச்சிகளை இலங்கையில் ஆராயும் பொழுது, மாணவர்பெறும் அடைவுப்புள்ளிகளுக்கு மட்டுமே ஆசிரியர்கள் பொறுப்பியம் தரவேண்டியநிலை காணப்படுதல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாணவரின் ஆளுமைமேம்பாடு, அறவொழுக்கமேம்பாடு, மனவெழுச்சிமேம்பாடு முதலியவை பின்தள்ளப்பட்டு அடைவுப்புள்ளிகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய சமநிலை குன்றிய நிலை ஆசிரியவாண்மையைப் பாதிப்படையச் செய்கின்றது.

அடுத்த நூற்றாண்டுக்கான கல்வி மேம்பாடு ஆசிரியவாண்மை மேம்பாட்டில் அடிப்படையாகத் தங்கியுள்ளது என்பதை ஆய்வாளர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். இலங்கையிற் கல்வி தொடர்பான தேசிய குறிக்கோள்கள் பின்வரும் தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

1 — தொடர்பு கொள்ளும் திறன்களின் மேம்பாடு:-
எண், எழுத்து, விளக்கம் முதலிய அறிகைத்திறன்கள் இதில் இடம்பெறுகின்றன.

2 — சுற்றாடல் நிலைத் தொடர்புகளின் மேம்பாடு:-
சமூகச்சூழல், உயிரியற்சூழல், பௌதிகச்சூழல் நிலைப்பட்ட அறிவும் அநுபவங்களும் இதில் அடங்கும்.

3 — அறவொழுக்கம், சமயம்சார் திறன்களின் மேம்பாடு:-
நலன்தரும் விழுமியங்கள், உளப்பாங்குகள், இசைவாக்கம் முதலானவை இப்பிரிவில் உள்ளடங்கும்.

4 — விளையாட்டும் ஓய்வுநேரப் பயன்பாட்டில் மேம்பாடும்:-
உடற்பயிற்சிகள், மெய்வல்லுனர் ஆக்கங்கள், ஓய்வுநேர நடவடிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள் இப்பிரிவில் இடம்பெறும்.

5 — கற்பதற்காகக் கற்றல் தொடர்பான திறன்கள்:-
சிக்கலாகி வரும் அறிவுத்தொகுதி, நெருக்கடியான சமூக இயல்புகள், விரைவுற நிகழும் மாற்றங்கள், முதலியவற்றின் மத்தியில் மனித இயக்கப்பாடுகளை மேம்படுத்தும் திறன்கள் இதில் அடங்கும்.

மேற்கூறிய குறிக்கோள்களை நோக்கிய செயற்பாடுகளில் கல்விசார் ஆளணியினரும் ஆசிரியர்களும் ஒன்றுபட்டுச் செயற்படுவதுடன் பொறுப்பியத்தையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

கல்வியின் பயன்நுகர்வோர் மாணவர் என்பதை மீண்டும் மனங்கொள்ளவேண்டியுள்ளது. இந்தப் பயன் நுகர்வை வலுப்படுத்த ''மீண்டும் வலுவூட்டல் வேண்டும்'' என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்களுக்கு மீள்வலு அளிக்கப்படும் பொழுது, ஆசிரியர்களுக்குரிய அதிகாரம், வலு, பங்கேற்றல் பொறுப்பியம் முதலிய துறைகளில் மேம்பாடுகள் ஏற்படும்.

ஆசிரியர்களுக்குரிய உயர்கல்வி வாய்ப்புக்களின் விரிவு, ஆசிரிய சேவை ஒழுங்கமைப்பு ஆசிரியர்களின் வாண்மை நிலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முதலியவை கல்வியின் தரத்தையும், ஆசிரியர்களின் பங்களிப்பையும், பொறுப்பியத்தையும் மேலோங்கச் செய்ய உதவும்.

கலாநிதி சபா. ஜெயராசா
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# ஆசிரியமும் புதியதோர் அறைகூவலும்

காலத்துக்குக் காலம் ஆசிரியம் எதிர்கொள்ளும் அறைகூவல்கள் பல. அந்த அறைகூவல்களை எல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு, ''ஆசிரியம் ஒரு வாண்மை'' என்று மதிக்கப்படும் அளவுக்கு இன்று அது உயர்ந்துவிட்டது. இலங்கையில் சுயமொழிப் போதனையின் ஆரம்பத்தோடு, அறுபதுகளிலேயே, ''கற்பதற்குக் கற்றல்'' எனும் எண்ணக்கருவுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆயினும், நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்ட நிலைமையிலும் எதிர்பார்க்கப்பட்ட செயல்வடிவம் எய்தப்படாமை கண்கூடு. இதன் காரணமாகவே, இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்கக் காத்திருக்கும் மனித சமுதாயத்தின் மத்தியில் ''கற்பதற்குக் கற்றல்'' எனும் கோட்பாட்டிற்குப் புதிய செயல்வடிவம் கொடுக்கவேண்டியதன் இன்றியமையாமை இன்று இலங்கையில் உணரப்பட்டுள்ளது. இக்கோட்பாட்டிற்கான செயல்வடிவமும் அதன் வெற்றியும் ஆசிரியம் இன்று எதிர்கொள்ளவேண்டிய ஒரு புதிய அறைகூவலாகவும் உள்ளது.

இன்றைய யுகம் விஞ்ஞான, தொழில்நுட்ப யுகமாகும். இக்காலத்திலே விஞ்ஞானமும், தொழில்நுட்பமும், மருத்துவமும், வாழ்க்கை இயலும், இன்னோரன்ன பிற அறிவுத்துறைகளும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. இவற்றின் அதிவேகமான வளர்ச்சி காரணமாக அவ்வளர்ச்சி வழியே இன்றைய உலகும் வேகமான மாற்றத்துக்குட்பட்டு வருகின்றது. மாறி வருகின்ற இவ்வுலகிலே வாழ்கின்ற ஒவ்வொருவனும் விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் அடிப்படையான அறிவையேனும் பெற்றிருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அல்லாவிடின், இன்றைய சமூக ஓட்டத்தில் அவன் பின் தங்கி விட நேரிடும். இப்பின்னடைவு தனிமனிதனை மட்டும் பாதிக்கின்ற ஒன்றன்று. ஒரு மனிதன் ஒரு தனியாள் மட்டுமன்றி, அவன் ஒரு குடும்ப உறுப்பினன், குடிமகன், உற்பத்தி செய்பவன், பல உத்திகளைப் புரிபவன், படைப்புக் கனவுகளைக் காண்பவன் எனப் பல்வேறு நடிபங்குகளை வகிப்பவனுமாவான். இவ்வாறு பல்வேறு பொறுப்புக்களையும் நிறைவேற்றும் ஒருவனாக விளங்க வேண்டியவன் என்ற வகையில் ஒரு தனிமனிதனின் பின்னடைவு அவன்சார் சமூகத்தையே பாதிக்கின்ற ஒன்றாகும். எனவேதான் ஒருவனின் அறிவு சமகாலப் போக்குகளுடன் இணைந்தாய்ச் செப்பனிடப்படவேண்டிய ஒன்றாகவும் உள்ளது. இதுவே ''வாழ்நாட்கல்வி'' எனும் தத்துவத்தின் அடிப்படையாகும்.

கல்வி என்பது வாழ்நாள் முழுவதும் தொடருகின்ற ஒரு நீண்ட செயற்பாடாகும். ''முறைசார்ந்த நிறுவனங்களூடாகப் பெறப்படுவதே கல்வி'' என்ற காலங்கடந்த மனப்பாங்கு இன்று மறுதலிக்கப்பட்டு கல்வியானது முறைசார் கல்வி, முறைசாராக்கல்வி, முறைமையில் கல்வி எனப் பரந்து விரிந்துள்ளது. திட்டமிடப்பட்ட வகையில் முறைசார் நிறுவனங்களூடாக வழங்கப்படுகின்ற முறைசார் கல்விவாய்ப்புகளை பெறாதவர்களுக்குமென இந்த முறைசார் நிறுவன அமைப்புகளுக்கு வெளியே தொழிலை மையமாகக் கொண்டு வழங்கப்படுகின்ற தொழிற்பயிற்சிகளும் வயது வந்தோருக்கான எழுத்தறிவுப்பயிற்சிகளும் பணிசார் கல்வியும் முறைசாராக்கல்வி என்ற வகையுள் அடக்கப்படுகின்றன. இவ்விரு வகைகளுள்ளும் அடங்காது தொடர்பு சாதனங்களூடாகவும் சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள் போன்ற வழிமுறைகளூடாகவும் எந்தவித எதிர்பார்ப்புமின்றிக் கிடைக்கின்ற சமயோசிதக் கல்வி (Casual learning) முறைமையில் கல்வி என அழைக்கப்படுகின்றது.

சமயோசிதக் கற்றலாக அமையும் முறைமையில் கல்வி இன்றைய நவீன உலகின் சவால்களுக்கேற்ப புதியதொரு பரிமாணத்தைப் பெறவேண்டியதாகின்றது. கல்வியைச் சனநாயகப் படுத்தவேண்டிய தேவையும் வகை தொகையின்றி ஏற்படும் அறிவுப்பிரவாகமும் விரைவாக

மாற்றம் அடைந்துவரும் சமூகத்தின் தேவைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவசியமும் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கும் உலக நெருக்கடிகளுக்கும் தீர்வுகாணப்படவேண்டிய அசியமும் முறைமையில் கல்விக்கு இப்புதிய பரிமாணத்தைப் பெற்றுக்கொடுப்பனவாய் உள்ளன. இப்புதிய பரிமாணத்துடன் இணைந்ததான முறைமையில் கல்வியே ''வாழ்நாட்கல்வி'' எனும் நவீன எண்ணக்கருவுக்கு அர்த்தம் வழங்குவதாய் உள்ளது.

வாழ்நாட்கல்வி என்பது இன்றியமையாத ஒரு கருப்பொருளாக ஏற்கப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில், வாழ்நாட்கல்வியை வளம் நிறைந்ததாகச் செய்வதில் முறைசார் நிறுவனங்களினதும் குறிப்பாகப் பாடசாலைகளினதும் ஆசிரியர்களினதும் பங்கு என்ன என்பதே இன்று எம்முன் உள்ள கேள்வியாகும். இக்கேள்விக்குப் பதில்தேட விழையும் போதே கற்பதற்குக் கற்றல் எனும் கோட்பாடு அறிமுகமாகின்றது.

எதனையும் எக்காலத்தும் கற்கும் ஆர்வமும் மனநிலையும் தூண்டப்படுவதே கல்வி. இவ்வகை ஆர்வத்தையும் மனநிலையையும் பெறும் திறன்களைப் பெற்றுக்கொடுப்பதே ''கற்பதற்குக் கற்றல்'' எனும் கோட்பாட்டின் உட்பொருளாகும். 'கற்பதற்குக் கற்றல்' எனும் இச்சுயகற்றற்திறனை விருத்திசெய்யும் வகையில் பாடசாலைப் பாடவிதானத்தை அமைத்துக் கொள்ளும்போது கற்றல் முறைமைகள் முக்கியத்துவம்பெறும், சில திட்டவட்டமான கோட்பாடுகளை உள்ளடக்கியதாய் குறிப்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கெனப் பிரயோகிக்கக்கூடிய பொதுவிதிகளையும், வழிமுறைகளையும் கற்றுக்கொள்வது இம்முறையியலில் கூடிய கவனம் பெறும்.

'கற்பதற்குக் கற்றல்' என்பது ஒரு முறையியலாகக் கொள்ளப்படுமிடத்து, பாடசாலைப் பாடங்களுடன் தொடர்புபடுத்தி சுயகற்றற் திறன்கள் வளர்க்கப்பட வேண்டுமா அல்லது அவ்வாறு பாடங்களுடன் தொடர்புபடுத்தாது பொதுவாகவே இத்திறன்கள் பற்றி அறிவுறுத்தப்படவேண்டுமா என்பதும் வாதப்பிரதிவாதத்துக்குரியதாகும். ஆயினும், குறித்த ஒரு பாடத்துடன் தொடர்புபடுத்தி இத்திறன்கள் கற்கப்படுமிடத்து, அக்குறித்த நிலைமைகள் தவிர்ந்த வேறு சந்தர்ப்பங்களில் அவற்றைப் பிரயோகிக்கும் ஆற்றலைப் பிள்ளைகள் பெறமுடியாது போய்விடும் என்று இன்று கருதப்படுகிறது. அவ்வாறெனின், பிள்ளைகள் குறித்த நிலைமைகளில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கெனப் பிரயோகிக்கின்ற வழிமுறைகள் பற்றிய புரிந்துணர்வை அவர்களிடத்து ஏற்படுத்துவதே ''கற்பதற்குக் கற்றல்'' எனும் கோட்பாட்பாடின் நோக்கமாகும்.

பாடசாலைக் கல்வியினூடாக வரையறுத்த பாடவிதானத்துக்கும் மேலாக வாழ்நாட்கல்விக்கான தயார்ப்தடுத்தலின் ''கற்பதற்குக் கற்றல்'' எனும் கோட்பாட்டிற்கும் செயல் வடிவம் கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பை ஆசிரியர்களே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் ஆகிறார்கள். உண்மையிலேயே இப்பொறுப்பு ஆசிரியம் எதிர்கொள்ளவேண்டிய ஓர் அறைகூவலே. ஆனால், இத்தகு அறைகூவல்களை எதிர்கொண்டு வெற்றிகொள்வதிலேயே ஆசிரியத்தின் மகத்துவம் பேணப்படும். அந்நிலையிலேயே ''ஆசிரியம் ஒரு வாண்மை'' என மதிக்கப்படுதல் அர்த்தம் பெறும்.

''The only man who is educated is the man who has learned how to learn — how to adapt and change.''

— Carl Rogers (freedom to Learn)

த. கலாமணி,
விரிவுரையாளர், கல்வியியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்

# உள்ளம் குதூகலிக்க உவந்து வாழ்த்துகிறோம்

அறங்களுள் மேலான அறம் ''ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்று முரசறைகிறான் மகாகவி, பாரதி. அத்தகைய மேலான புனிதப் பணிதலை நிற்கும் இந்துவின் எழில் பரப்பும் ஆசிரிய தீபங்களே,

பொன்னடிகள் வணங்கிப் பூப்பொழிந்து வாழ்த்தி மென்மேலும் உங்கள் பணிசிறக்க வாழ்த்துகிறோம். இந்துவென்னும் எழில்மலர்ச் சோலையிற்பூத்த கற்பகப் பூக்களே, கரையிலாக் கல்வியீந்து எம் பிள்ளைகள் உயர்வுற உங்கள் பணி தொடரட்டும்.

''பிறர் பிள்ளை தலைதடவத் தன்பிள்ளை தானே வளரும்'' என்ற முதுவாக்கின் பொருளுணர்ந்தவர்கள் நீங்கள். உள்ளத்தாற் பொய்யாதொழுகி - வெள்ளம்போற் கலைகள் பாயத் - தள்ளரும் பணிகளாற்றும் உம்மைப் பெருமையுடன் வாழ்த்துகிறோம்.

ஓர் ஆசிரியன் நடந்துசெல்லும் பாதை பவிசுமிக்க பஞ்சணைப் பாதையல்ல - கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதை அது.

உயரதிகாரிகள், அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலதரப்பட்ட தரப்பினரின் கவனிப்புகளுக்கும், விமர்சனங்களுக்கும் முகங்கொடுத்து - சொந்தச் சுமைகளையும் தோள்களிலே சுமந்தபடி - எதிர்கால சமுகத்தின் எழுச்சிக்காக உங்களை இத்துறையில் நீங்கள் அர்ப்பணித்துள்ளீர்கள்.

இதைவிட மேலான வேதனை - தோல்வியில் உங்களைத்தூற்ற முனைகின்ற நம்மவர்கள் - வெற்றியில் உங்கள் பங்கைப் பார்க்க மறுப்பதுதான்.

மாணவன் சித்தியடையத் தவறினால் - பழிமுழுக்க ஆசிரியன் தலைமீது - அவன் உயர்ந்த சித்தி பெற்றுவிட்டால் பாராட்டு பெற்றோருக்கும், மாணவனுக்கும் தான். வெற்றியில் உங்கள் சேவையின் மகிமை நினைவு கூரப்படுவதில்லை.

''அடி மத்தளத்துக்கும் - பெயரும் பொன்னாடையும் வித்துவானுக்கும்'' போகும் சாதனைகள் தான் இயல்பான நிகழ்வாகி உங்கள் இதயத்தைக் குடைவதை நாமறிவோம். என்றாலும் உள்ளத் தூய்மையுடனும், உறுதியுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் நீங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்.

இந்துவின் வரலாற்றுப் பொன்னேட்டில் உங்களுக்கென ஒருபக்கம் நிச்சயமாக இருக்கும்.

இருபத்தோராம் நூற்றாண்டை இன்முகத்தோடு எதிர்கொள்ளத் தயாராகிவரும் இவ்வேளையில் - எம் மாணவர்களின் இலட்சியக் கனவுகளையும் உயர்முறையில் இட்டுச்செல்லும் பெரும்பொறுப்பை நீங்கள் சுமந்திருக்கிறீர்கள்.

சுமைதூக்கும் உங்கள் தோள்களுக்கும் துணையாக இந்துவின் துணையமைப்புகளும் நிச்சயம் கைகொடுக்கும்.

''ஆயிரங்கரங்கள் மறைந்து நின்றாலும் ஆதவன் மணிக்கரம் மறைவதில்லை''. அது போலக் காலத்தைவென்று உங்கள் நற்பணிகள் ஒளிமிளிரும்.

இந்த நம்பிக்கையோடு தொடர்ந்து செல்லுங்கள் - துணிந்து நில்லுங்கள். உங்கள் சேவைகள் என்றும் நிலைத்திருக்கும். உங்கள் பணிகளை வாழ்த்தி, வரவேற்று - மேன்மேலும் உங்களிடம் அவற்றை எதிர்பார்த்து - இச்சிறு கையேட்டை உங்கள் கரங்களில் அன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

நன்றி.

— மலர்க்குழுவினர்

# சிந்தனைச் சிதறல்கள்

தெய்வ பக்தியும், ஜீவகாருணியமும், பல நூல்களிலே பழகிய தேற்றமும், சொல் வன்மையும், உலக நடையறியும் அறிவும், உயர்குணங்களும் நிறையப் பெற்றவனே நல்லாசிரியன் ஆவான்.

பாடஞ் சொல்லும் குணமில்லாமையும், இழி குணங்களும், பிறர் மேற் கொள்ளும் பொறாமையும், பொருளாசையும், வஞ்சனையும், உடையவர்கள் ஆசிரியருக்குரிய தகுதி அற்றோராவார்கள்.

— நன்னூல்.

பிணி தீர்ப்பவனாக அன்றேல் ஒரு ஆசிரியனாக வரமுயற்சி செய். அவையே சமூகத்துக்கு அர்ப்பணிக்க உதவும் முக்கிய தொழில்களாகும்.


— கிரேக்க அறிஞர் அரிஸ்டோட்டில்.

பின் வாங்கிலுள்ள மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதே ஓர் ஆசிரியரின் மகத்துவமான பணியாகும்.

ஒன்றுந் தெரியாதவனிலும் பார்க்க எழுத, வாசிக்கத் தெரிந்தவன் சிறந்தவன். நல்லவற்றை வாசிப்பவன் அவனிலுஞ் சிறந்தவன். எழுதுபவற்றைக் கோவைப்படுத்தி நூலாக்குபவன் அவனிலுஞ் சிறந்தவன். இவர்களுக்குக் கற்பித்து, இவர்களை நெறிப்படுத்தும் ஆசிரியன் அனைவரிலும் மிகச் சிறந்தவன்.

பாடக் குறிப்பை எழுதி, அலகுகளை முடித்துப் பாடப்பதிவு செய்வதுடன் ஆசிரியரின் பணி முடிவடைவதில்லை. தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆசிரியர்களாலேயே நல்ல மாணவர்களை உருவாக்கி எதிர்கால உலகத்தை உயரச் செய்ய முடியும்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆசிரியர்களை
மனமார வாழ்த்துகின்றோம்




# அருள் விநாயகர்
# மோட்டோர்ஸ்

103. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

262, கண்டி வீதி,
சாவகச்சேரி.

மோட்டோர்ஸ் இயந்திர உதிரிப்பாகங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்
ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்

# கணேசா
# விற்பனை நிலையம்

இல. 276, கண்டி வீதி, சாவகச்சேரி.

* கட்டடப்பொருட்கள்
* பெயின்ற்வகைகள்
* நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.